**IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR**
**DEPOSITION OF WITNESS**
**OS. No. 121/2023 நாள் 25.09.2024 -PW2 – பார்வதி க/பெ.மாரிமுத்து**

**குறுக்கு விசாரணை**

எனது விலாசம் முதல் சேரி, நத்தம்பட்டி, கீழத்தெரு, பட்டுக்கோட்டை தாலுக்கா. அது எனது கணவர் வீடு. 37 வருடங்களாக அங்கு வசித்து வருகிறேன். வழக்கு எதற்காக போட்டுள்ளேன் என்றால் எனது அண்ணனுடைய சொத்து எனக்கும் எனது சகோதரிகளுக்கும் வேண்டும் என்று கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் இந்த வழக்கில் 3ம் வாதி. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலம் எனது சகோதரி உமாராணி வீட்டில் தான் தயார் செய்தோம். டைப் செய்தது எங்கு தெரியுமா என்றால் எனது அக்காவும் அவரது கணவரும் தான் அதை பார்த்துக்கொண்டார்கள். வழக்குமூலத்திற்கான சங்கதிகள் அனைத்தும் வழக்கறிஞருக்கு நான் தான் சொன்னேன். எனது இறந்துபோன சகோதரர் பெயர் கேசவன் அவரது சொத்தில் தான் பங்கு கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். அவர் 18.2.2004ல் இறந்துபோனார். அவர் விபத்தில் இறந்துபோனார். அவர் இறந்த விபரம் எனக்கு போன் மூலம் எனது பெரிய அக்கா ஜெயலெட்சுமியின் மகள் சிவரஞ்சனி சொன்னார். அவர் 4 நாட்கள் கழித்து இறந்துவிட்டார். விபத்து நடந்து 3வது நாள் எனது சகோதரர் கேசவனை தஞ்சாவூர் பெரிய ஆஸ்பத்திரியில் வந்து பார்த்தேன். முதல் நாளில் இருந்து எனது சகோதரி உமாராணி மற்றும் அவரின் கவணர் கேசவனை பார்த்துக்கொண்டார்கள். பிரமாண வாக்குமூலத்தில் 11 வது பாராவில் 2ம் வாதியாகிய நான் தனியாளாக எனது சகோதரரை கவனித்து கொண்டு சிகிச்சைகள் செய்துவந்தேன் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 2ம் வாதியின் வாக்குமூலத்தை அப்படியே காப்பி செய்து நான் எனது வாக்குமூலத்தில் போட்டுள்ளதால் இந்த வழக்கு வாக்குமூலத்திற்கான விபரங்களை நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. உமாராணிக்கு கேசவனின் விபத்து பற்றி நான் தான் சொன்னேன். விபத்து நடந்த தகவல் எனக்கு இரவு 10.00 மணிக்கு வந்தது. உடனே நான் எனது சகோதரி உமாராணிக்கு இரவு 10.00மணிக்கு சொன்னேன். நான் சொன்னபிறகு தான் உமாராணி தெரிந்து அதன்பிறகு தான் அவர்கள் சென்றார்கள். எனது சகோதரருக்கு எத்தனை மணிக்கு விபத்து நடந்தது என்று எனக்கு தெரியாது. உமாராணியும் அவரது மகளும் எனது சகோதரரை பார்த்துக்கொண்டாக சொல்வது பொய் என்றும் அவரை பார்த்துக்கொண்டது பாலசந்தரும் அவரது மனையும் தான் என்றால் சரியல்ல. உமாராணி, கேசவன் அடிபட்ட இடத்திற்கே சென்று பார்த்தார். விபத்து நடந்தது இரவு 8.11 மணி என்றும் உடனே அவரை மருத்துவமனைக்கு கொண்டுசென்றுவிட்டதாகவும் சகோதரிக்கு சாதகமாக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் பிப்ரவரி 18-ம் தேதி விபத்து நடக்கவில்லை பிப்ரவரி 14ம் தேதி தான் விபத்து நடந்தது என்றால் தேதி ஞாபகம் இல்லை.

**நீதிமன்ற நேரமின்மையால் குறுக்கு விசாரணை வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

நான் சொல்ல என் உத்திரவுப்படி தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.